**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 24.02.2026

அசல் வழக்கு எண். 128 /2014

வா.சா. 3 – ராஜேந்திரன் , த/பெ. சுப்புராயன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

பெருமாள் குடும்பம் பற்றி தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். பெருமாளுக்கு ஒரு சில சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலமாக பூர்வீகமாக கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். பழனிச்சாமி ஊரை விட்டு எப்பொழுது சென்றார் என்றால் தெரியாது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வாலாஜாபாத் சென்று விட்டார் என்றால் சரிதான் பழனிச்சாமி உடன் உடன் பிறந்தவர்கள் அமாவாசை, கங்காதரன் அவர்கள் பெயரில் தனித்தனியாக சொத்துக்கள் இருக்கிறது. பழனிச்சாமி பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் குறித்து நீங்கள் பஞ்சாயத்து செய்யவில்லை பூர்வீக சொத்துக்கள் குறித்து தான் பஞ்சாயத்து செய்தீர்கள் என்றால் சரிதான். கடந்த 1988 ஆம் ஆண்டு கேசவ பிள்ளை என்பவர் தனியாக கூர் சீட்டு எழுதிய விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக தெரியாது பஞ்சாயத்தில் சொன்னார்கள். பஞ்சாயத்து எப்பொழுது நடைபெற்றது என்றால் 1990ஆம் ஆண்டு பஞ்சாயத்து நடைபெற்றது. அதில் என்ன எழுதினீர்கள் என்றால் கணக்குப்பிள்ளை கூர்சீட்டின்படி அவரவர்கள் பிரித்துக் கொண்டு அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். கூர்சீட்டினை நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. அதில் என்ன எழுதப்பட்டு இருக்கிறது என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. பஞ்சாயத்து செய்யும்போது பழனிச்சாமி எந்த சொத்து அனுபவிக்கவில்லை

என்றால் சரியில்லை. கங்காதரனும், அமாவாசையும் தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். நீங்கள் 1990ஆம் ஆண்டு ஆவணம் எழுதிக் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியில்லை அவ்வாறு நீங்கள் ஆவணம் எதுவும் எழுதவில்லை என்றால் சரியில்லை. பழனிச்சாமி பாகத்தினை சரிவர அனுபவிக்கவில்லை என்று சொல்லி உள்ளீர்கள் அது தவறு என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் சாட்சி ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.